முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

சாட்சியின் சான்றுரை - PW-1

OS.No.102 /2017

பெயர்:திரு/திருமதி : ராமமூர்த்தி நாள். 09.12.2020

**சாட்சி அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

உங்கள் தாத்தா உயிரோடு இருந்த காலத்தில் தாவா சொத்து 1 முதல் 6 ஆவணங்களில் கண்ட சொத்துக்களை 07.03.1941 ல் விழுப்புரம் செம்மேடு கிராமத்தை சேர்ந்த அருணாச்சல செட்டியார் மனைவி லட்சுமியம்மாளிடம் ரூ. 645/= போகியம் வைத்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன கடனை உங்கள் தாத்தா கொடுக்காமல் இறந்து போனதால் அந்த கடனை வீரப்ப கவுண்டர் பைசல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட கடனை அடைத்ததற்காக வீரப்ப கவுண்டருக்கு 1ம் பிரதிவாதி செல்வராஜ் ரூ.750/= க்கு எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் வாதி உங்கள் தகப்பனார், 8ம் வாதி அபரஞ்சிதம் ஆகியோர் மீது கஞ்சனூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 176/1976 ஒரு வழக்கு நடந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கிற்காக 1ம் பிரதிவாதி நிறைய கடன் வாங்கி வழக்கு நடத்தினார் என்றால் எனக்கு தெரியாது. 11..11.1981 தேதியில் கோபால் கவுண்டருக்கு ரூ.2000/= அதே தேதியில் ரங்கநாத கவுண்டருக்கு ரூ.2500/= பிராமசரி நோட்டு எழுதிக் கொடுத்து அதை அடைத்து உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன கடன்களை அடைப்பதற்காக 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.1, வா.சா.ஆ.8, வா.சா.ஆ.23 எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2ம் வாதி பரந்தாமன் நியாயவிலைக் கடையில் பணியிலிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. 2ம் வாதி பரந்தாமன் நியாயவிலைக் கடையில் கையாடல் செய்த வழக்கிற்காக 1ம் பிரதிவாதி நிறைய செலவு செய்து அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக வேலு கவுண்டரிடம் விற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.11 முதல் வா.சா.ஆ.14 வரை ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களை 1ம் பிரதிவாதியின் மாமனார் ராமசாமி கவுண்டர் மகன் வடிவேலு வாங்கி அதனை 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 17.11.1972 தேதியில் விழுப்புரம் கூட்டுறவு வேளாண்மை வங்கியில் பெற்ற கடனை அடைக்க 1ம் பிரதிவாதியின் சொத்துக்களை வா.சா.ஆ.17, வா.சா.ஆ.20 மற்றும் இதர சொத்துக்களை 03.06.2013 தேதியில் சொத்துக்களை விற்று அந்த கடனை அடைததுள்ளார் என்றால் அது பொய்யான தகவல் ஆகும். மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் 1, 2 வாதிகளுக்கு தெரிந்து கொண்டதால் தான் இந்த வழக்கில் அவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் தவறு. 1ம் பிரதிவாதி விற்ற சொத்துக்களை அதை கிரையம் பெற்ற நபர்கள் பட்டா மாற்றி அனுபவித்து வந்தார்கள் என்றால் மேற்சொன்ன பொய் கிரையம் செய்து வாதிகள் எங்களை ஏமாற்றிவிட்டார்கள். மேற்சொன்ன 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியாது. ஏழுசெம்பொன் கிராமத்தில் 2007ல் சட்ட உதவி மற்றும் சட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது என்றால் சரி என்று கூறிவிட்டு பிறகு தவறு என்று கூறியுள்ளார். பி.வா.சா.1ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது இலவச சட்ட உதவி மையத்தில் கொடுத்தேன். இலவச சட்ட உதவி மையத்தில் 2007 ல் 2ம் பிரதிவாதி பாகம் கொடுக்க மறுத்து வருகிறார் என்று இல்லை. 1 மற்றும் 2 வாதிகளுக்கு வழக்கு நடத்த விருப்பம் இல்லை என்றும் நீங்கள் தான் வலுக்கட்டாயமாக வழக்கு நடத்துகிறீர்கள் என்றால் இல்லை.